Registered as News Paper     பக்கங்கள் 04     விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM     PEOPLES DAILY     மக்கள் தினசரி

நாதம்: 02     திருவள்ளுவர் ஆண்டு 2022     ஐப்பசி 13     (30 - 10 - 1991)     புதன்கிழமை     ஓசை: 254

## சூழ்நிலையை பொறுத்தே வடக்குக் கிழக்கில் பரீட்சை

(கொழும்பு)

1991 ஆம் ஆண்டிற்கான க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையை வடக்குக்கிழக்கில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள போதும், இப்பரீட்சையை அங்கு நடாத்தக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாகத் தகவல்கள் கிடைக்கும்பட்சத்திலேயே இதுபற்றி முடிவுசெய்யப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார். இதேநேரம் ஏனைய பகுதிகளில் திட்டமிட்டபடி டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி இந்தப் பரீட்சை நடைபெறும் என்றும், இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவ (4 ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன் ஊடாக உணவுக் கப்பல்கள்

## விடுதலைப் புலிகள் அனுமதி

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டி-கேரதீவுப் பாதை மூடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டிற்குள் அத்தியாவசிய உணவுப் பொருள்களை தருவிக்க காங்கேசன்துறை துறைமுகம் பயன்படுத்தப்படவுள்ளது. இதற்கான அனுமதியை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. இந்த அனுமதியைத் தொடர்ந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் விரைவில் உணவுக்கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனையிறவும் பாதையை திறந்து விடுவதற்கு புலிகள் இயக்கம் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து மாற்றுவழித்திட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்டது தெரிந்ததே. மாற்றுவழியாகத் தற்பொழுது பாவனையிலிருக்கும் பருத்தித்துறைத் துறைமுகத்துடன்காங்கேசன்துறைதுறைமுகத்தையும் பயன்படுத்தித் தேவையான உணவுப் பொருள்களைத் தருவிக்க புலிகள் இயக்கம் சம்மதம் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் உணவுக் கப்பல்களைக் கொண்டு வருவது சம்பந்தமாகவும், உணவுப் பொருள்களை குடாநாட்டுக்குள் கொண்டுவருவது சம்பந்தமாகவும், வீதி ஒழுங்குகள் சம்பந்தமாகவும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் புலிகளுடனும் சிறிலங்கா அரசாங்கத்துடனும் தொடர்ந்து பேச்சுக்களை நடாத்தி வருகிறது.

மாமிகால கடல் கொந்தளிப்பு காரணமாக பருத்தித் துறைத் துறைமுகத்தினூடா (4 ஆம் பக்கம் பார்க்க)

## பொருள்களின் பட்டியலை

## வீரவணக்கம்

பாலு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தின் 14 ஆம் கிராமம் என்னும் இடத்தில் கடந்த 27 ஆம் திகதி எதிர்பாராத விதமாக சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் பாலு (சுப்பிரமணியம் நாகப்பன் - கோம்மாதுறை மட்டக்களப்பு) வீரமரணமடைந்தனர். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## நிவாரண விநியோகத்தை பூர்த்தி செய்யவில்லை

( யாழ்ப்பாணம் )

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகத்தை யாழ் செயலக அத்திவாவசியசேவைகள் பிரிவு இதுவரை பூர்த்தி செய்யவில்லை.

இடம்பெயர்ந்த மக்களுக்கு

சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். இம்மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளே தற்பொழுது தொடர்ச்சியாகக் கிடைத்து வருகின்றன. (ஈ)

## நவ. 3 முதல் மாவீரர் குறிப்பேடு

மண்மீட்பிற்காய் உயிர் நீத்த மாவீரர் குறிப்பேடு எதிர்வரும் நவம்பர் மூன்றாம் திகதி முதல் தொடர்ச்சியாக 'ஈழநாதத்தில்' வெளியிடப்படவுள்ளது. 1982 - 11 - 27 முதல் 1991-09-31 வரை மண்மீட்பிற்காக உயிர் நீத்த மாவீரர்களின் முழு விபரங்களும் இக்குறிப்பேட்டில் இடம்பெறவுள்ளது. உங்கள் பிரதிகளைஉறுதி செய்து கொள்ள முன்கூட்டியே முகவர்களிடம் தொடர்பு கொள்ளவும்.

## 2வது லெப். நிலாவிற்கு யாழ். நகரில் அஞ்சலி

(ஈச்சமோட்டை)

தென் தமிழீழத்தில்சென்ற 27-10-91 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த போராளியான 2 வது லெப். நிலா அவர்களின் 3 ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று மாலை 5 30 மணியளவில் சுண்டிக்குழி மத்திய மகாவித்தியாலயத்தில் தீவக மகளிர் முன்னணியைச் சேர்ந்த அரசியல் பொறுப்பாளர் அன்பரசி தலைமையில் நடைபெற்றது. இந்த அஞ்சலிக் கூட்டத்தில் த. வி. பு. ம. முன்னணித் தீவகப் பொறுப்பாளர் தமயந்தி (சுதா)

தீவக மக்களுறவுக் கொள்கை (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆரம்பநீதிமன்று திறப்புவிழா

வலிகாமம் பிரிவு ஆரம்ப நீதிமன்று திறப்புவிழா நாளை காலை 10 00 மணிக்கு சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டர் முன்பாக அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் நடைபெறும். இணக்கசபை உறுப்பினர்களும், பொறுப்பாளர்களும் மற்றும் அனைத்து மக்களும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு தமிழீழ நீதிநிர்வாக பிரிவு வேண்டுள்ளது.

# கிழக்கில் புலிகளின் தாக்குதல் தீவிரம்

## இரு மோதலில் 12 படை பலி பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

திருமலை - அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இருவேறு தாக்குதலில் நேற்று மட்டும் பன்னிரண்டு சிறிலங்கா ஆயுதப் படையினர் கொல்லப்பட்டனர். நால்வரைக் காணவில்லை. பலர் காயமடைந்தனர். சில இராணுவத்தினரின் சடலங்களும் பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

திருமலையில்ரோசந்துசென்ற     இவ்விரு தாக்குதல்களில் காயமுற்றனர் என்று தெரி

...களைத் தருவிக்க புலிகள் இயக்கம் சம்மதம் தெரிவித் பேச்சுக்களை நடாத்தி வருகிறது-

# பொருள்களின் பட்டியலை உடன் கையளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள சில்லறை மொத்த வியாபாரிகள் தங்கள் கைவசமுள்ள அத்தியாவசியப்படுத்தப்பட்ட பொருள்களெனப் பிரகடனப்படுத்தப்பட்ட பொருள்களின் விபரப்பட்டியல்களை யாழ்ப்பாணம் அரச அதிபர் காரியாலயத்தில் நாளை 31 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன் கையளிக்கும்படி யாழ். உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

அப்படி கையளிக்கத் தவறும் பட்சத்தில் அவர்கள் கைவசமுள்ள பொருள்கள் பதுக்கப்பட்ட பொருள்களெனக் கருதப்படும் என்றும் யாழ்ப்பாண உதவி அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்தால் கைது; ரெலோவால் விசாரணை

(கரடியனாறு)

மரப்பாலம் என்னும் இடத்திற்கு சிவில் உடையில் சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் கடை உரிமையாளரை முகாமிற்குக் கொண்டுசென்றதுடன் அவரது சைக்கிளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி காலை கரடியனாறு இராணுவ முகாமிலிருந்து சென்ற இராணுவத்தினரே கடை உரிமையாளரை முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

அம்முகாமில் கடை உரிமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள

# இந்தியப் பிரதமர் கொழும்பு வருவார்

(டில்லி)

தெற்காசிய கூட்டமைப்பு நாடுகளின் மாநாடான 'சார்க்' மாநாட்டில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கலந்து கொள்கிறார் என்று புதுடில்லியிலுள்ள வெளியுறவுத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியப் பிரதமர் இம் மாநாட்டில் கலந்து கொள்வாரா என்பது குறித்து சில பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளுக்கு பதிலளிக்கு முகமாகவே வெளியுறவுத்துறை அதிகாரி இதனைத் தெரிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

...உணவு விநியோகத்தை யாழ் செயலக அத்தியாவசிய சேவைகள் பிரிவு இதுவரை பூர்த்தி செய்யவில்லை.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இரண்டு வாரங்கள் உலர் உணவு நிவாரணத்தை வழங்குவது என்று செயலக அத்தியாவசிய சேவைகள் பிரிவினர் தீர்மானித்திருந்தனர்.

ஆனால் இரண்டு வாரங்கள் நிறைவடைந்தும் இரு வாரகால நிவாரண விநியோகம் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை. இதனால் இடம்பெயர்ந்த மக்கள் பெரிதும்

...உதவிகளே தற்பொழுது தொடர்ச்சியாகக் கிடைத்து வருகின்றன. (ஈ)

# தவறு

மணலாறு மாவட்டத்தில் 16-10-91 அன்று வீரமரணமடைந்த பெண் போராளியான மதி (அருணம்பலம் யோகனாம்பிகை, பத்தானை கேணியடி, மூளாய்) என்பதற்குப் பதிலாக 18-10-91 அன்று வெளிவந்த எமது பத்திரிகையில் மதீன் (தங்கராசா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புல்லுமலையில் இராணுவம் வீடுகளுக்குத் தீ; கொள்ளை

(மட்டக்களப்பு)

புல்லுமலை இராணுவத்தினர் 78 ஆம் கொலனிப்பகுதிக்கு சென்று அப்பகுதி மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் மூன்று வீடுகளைத் தீக்கிரையாக்கிவிட்டு பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த இருபத்தாறாம் திகதி நடைபெற்ற மேற்படி சம்பவத்தின்போது மூன்று சைக்கிள்களையும் வேறு சில பொருள்களையும் ஆடுகளையுமே இராணுவத்தினர் கொள்ளையடித்துச் சென்றனர்.

# 3 இராணுவ காவலரண்கள் வவுனி. புலிகளால் அழிப்பு

சில ஆயுதங்களும் மீட்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ முகாமின் மூன்று காவலரண்கள் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டதுடன் சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் மதகு வைத்த குளம் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ முகாம் ஒன்றின் மூன்று காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர்.

இக்காவலரண்களில் இருந்த இராணுவத்தினர் முகாமுக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

...காயமடைந்தனர். சில இராணுவத்தினரின் சடலங்களும் பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் எதுவித இழப்பும் ஏற்படவில்லை.

திருமலையில்ரோந்துசென்ற இராணுவத்தினர் மீதும், அம்பாறையில் குடியேற்றவாசிகளுக்குக் காவல் நின்ற இராணுவத்தினர் மீதும் இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விரு தாக்குதல்களில் திருமலைத் தாக்குதலை ஊர்ஜிதம் செய்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நான்கு இராணுவத்தினரும், நான்கு ஊர்காவற்படையினரும் புலிகளின் தாக்குதலுக்குப் பலியாகியுள்ளனர் என்று தெரிவித்தது. அத்தோடு மூன்று ஊர்காவற்படையைச் சேர்ந்தவர்களையும், ஒரு சிப்பாயையும் காணவில்லை எனவும் தெரிவித்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலையில் புலிகள் அதிரடி; 8 படை பலி ஆயுதங்கள் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சேருநுவரவுக்கும் அரிப்புசந்திக்கும்இடையே ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர்மீது நேற்று விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல் நடாத்தியதில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல நவீன ரக ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

காலை 7.00 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அம்பாறையில் 4ராணுவம் பலி ஆயுதங்கள், சடலங்கள் மீட்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியதில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றுக்காலை 9.40 மணியளவில் 36 ஆம் கொலணி என்ற சிங்கள குடியேற்றத் திட்டப் பகுதியில் காவல் கடமையில் இருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்திய போது நான்கு படையினர் அந்தஇடத்திலேயே கொல்லப்பட்டனர். இரு படையினர் காயங்களுடன் தப்பி ஓடி விட்டனர்.

இத்தாக்குதலின் போது

(4 ஆம் பக்கம் பார்க்க)

அம்பாறையில்

# படையினரின் சடலங்கள் மக்களின் பார்வைக்கு

(அம்பாறை)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரது சடலங்கள் நேற்று முதற்தடவையாக மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

நேற்றுக்காலை அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

# மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

# இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

[B/3203)

---

நகைத்தொழிலுக்குரிய

டைமெசின்:- அச்சுவகைகள்

மாலை அச்சு, குளிசை அச்சு, பென்ரன் அச்சு, ஸ்ரார் தோட்டு அச்சு, காப்பு அச்சுகள்.

எம்போசிங் மெசின்:- அச்சுவகை

(சுவாமிபென்ரன்வகைகள்)

கட்டிங்மெசின்:-

3 1/2 அடி திண்டுக்கல்இரும்புப்பெட்டி இங்கிலீஷ் பெட்டி ஆகியன உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மு. த. பாலகிருஷ்ணப்பத்தர்
இல. 86 நல்லூர் குறுக்குவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(R/1883)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வைபவமும்



---

## வரி விளம்பரம்

**ஜீவிதா**

தொழில் நுட்பக் கூடம்

ரீ. வி. டெக், றேடியோ, மணிக்கூடு, திவெண்டிக் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும் விற்பனையாளர்களும் வீடியோஸ்டூடியோ படப்பிடிப்பாளர்களும். புதிய பழையபாடல்களும் (புரட்சிப் பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஒட்டுமடம் சந்தி, ஒட்டுமடம். யாழ்ப்பாணம். (B/3239

**தேவை**

வேப்பம் விதை. இலுப்பம் விதை பெருமளவில் வாங்குகிறோம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (B/3374)

---

## ஒத்தி வைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று 30-10-91 யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெற விருந்த ஆண்டு ஒன்பதிற்கான வரலாறு பாட நூல் தயாரிப்பு கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் 16-11-91 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக சமூகக் கல்வி இணைப்பு அதிகாரி திரு. சி. புஸேந்திரன் அறிவித்துள்ளார்.

## 10 கோடி ரூபா புத்தகங்கள் நாசம்

(கொழும்பு)

பாடசாலைப் பிள்ளைகளுக்கு வருடந்தோறும் இலவசமாக வழங்கப்படும் பத்துக் கோடி ரூபா பெறுமதியான நூல்கள் நாசமாக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாசமாக்கப்படும் புத்தகங்களின் எண்ணிக்கை எண்பது லட்சம் எனவும், இலவசமாகக் கொடுக்கும் இந்தப் புத்தகங்களை மாணவர்களிடம் இருந்து பாடசாலை அதிபர்களோ, ஆசிரியர்களோ மீளப் பெற்றுக் கொள்வதில்லை என்றும், இதனாலேயே இவ்வாறு புத்தகங்கள் விரயமாக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## பாக். எப். 16 விபத்தில் சிக்கியது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் எப் 16 ரக படைவிமானமொன்று இஸ்

---

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 1992/93

பேராதனை, யாழ்ப்பாண பல்கலைக் கழகங்களின் பட்டப் பாடநெறிகளான

கலை முதற்தேர்வு- G A Q
வர்த்தக முதற்தேர்வு- FIRST IN COMMERCE
விஞ்ஞான முதற்தேர்வு- G S Q

க. பொ. த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி- 31-10-91

விரிவுரைகள் 2-11-91 சனி பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விஞ்ஞானம், வர்த்தகம், கணிதப் பிரிவு மாணவர்கள் கலை முதற்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதை அறியத்தருகிறோம்.

(B/3403)

---

## 45 வது நாளை நினைவு கூருகிறோம்

தாயின் மடியில் 17 - 05 - 1973



தாயக மண்ணில் 16 - 09 - 1991

மணலாறு நேரடி மோதலில் வீரமரணமடைந்த

### வீரவேங்கை லோஜி

(தர்மலிங்கம் கௌரிமலர்)

மண்மீட்கப்புறப்பட்டு வரலாற்றுப் போரிலே மாவீரர் ஆனவளே!
தவிக்குதம்மா உனை இழந்த தமிழீழ நெஞ்சங்கள்
பள்ளியிலே படிக்கும் காலம் நீ பாசறை புகுந்தபோது
கலங்கி நின்ற எங்களுக்கு கதைபல கண்டு
வந்து ஆறுதல் கூறிவைத்தாய்
எம் இதயத்தின் துயர் நீக்க கௌரி - நீ
லோஜி ஆகி வீறு கொண்டு பாய்ந்த வேளை
மாவீரர் வரிசையிலே, மணலாற்று மண்தனிலே
நீ விதையாக புதைந்து கொண்டாய்

---

## 6-ம் மாதநினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியையும்

### திருமதி நடராஜா செல்லம்மா

(செல்லம்)

| தோற்றம்:- | மறைவு:- |
|---|---|
| 1940-07-06 | 1991-04-30 |
| சிவன்,கோவிலடி | "சிவா வாசா" |
| காரைநகர். | சேமடு வீதி, ஓமந்தை. |

திதி:- 30-10-1991 புதன்கிழமை

விதியும் மதியை மறைத்து, மறைந்தும் மறையாத தாயே
அன்று நடந்த கொடுமரக்கரின் வெறியில்
உன் பாசத்துக்குரியவர் படும் பாடுகளை
நேரில் கண்டு தாங்கமாட்டாய் என்றோ
நீ அல்லும் பகலும் வணங்கும் அம்பாள் சந்நிதியில்
குருதியைப் பொழிந்து குலதெய்வமாகி விட்டாய்
உன் கூட ஒரு வீரவேங்கையுமா?
உமை இழந்தோம், உடைமை இழந்தோம், மனநிம்மதி இழந்தோம்
உணர்வினை இழந்திட்டோம்.
உங்கள் மறைவு எத்தனை ஆண்டு சென்றிடினும்
எம்மால் மறக்க முடியாதம்மா
உங்கள் ஆத்ம சாந்திக்கு என்றும் எங்கள் பிரார்த்தனைகள்

இந்நாளன்று எம்மில்லாதிருந்து வீரசுவர்க்கம் எய்திய வீரவேங்கைக்கும் எம் பிரார்த்தனைகளும் வீரவணக்கங்களும்

30-10-1991 எமதில்லத்தில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் விடுதலைப் புலிகள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

"சிவா வாசா" சேமடுவீதி ஓமந்தை — உங்கள்பிரிவால்துயருறும் கணவன் ச. நடராஜா பிள்ளைகள்

(R/1885

---

## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 30

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் தெல்லிப்பளை மாதனைப் பகுதியில் இருந்த எமது முகாமொன்றை சிறிலங்காப் படையினர் சுற்றி வளைத்த போது வீரமரணமெய்திய

**அன்சார்** (நிக்கலஸ் மைக்கல் குரூஸ் - மன்னார்)

**றோம்** (ஜெகநாதன் - சாவகச்சேரி)

1986 ஆம் ஆண்டு வரிகாவற்றுறை - காரைநகர் கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது வீரமரணமெய்திய



மணலாற்றில் களப்பலியான

## வீரவேங்கை கல்சுத்

(மார்க்கண்டு மதனரூபன்) (பழம்)

புத்தூர் கிழக்கு

வீரஜனனம் 25-08-76 வீரமரணம் 16-09-91

மண்ணிலே தாகம்
மனதிலே வேகம்
கண்ணிலே சீற்றம்
களத்திலே ஏற்றம்
போராட்டம் புதுத்தோற்றம்
அரசபடை தடுமாற்றம்

விதைத்த உயிர் வளர்ந்தோங்கும்
தமிழருக்கே உரிமைதரும்
தமிழீழம் மலர்ந்து வரும்
வேங்கைபுலிகள் ஆட்சியெழும்

மணலாற்றுப் போரிலே களப்பலியான
அனைத்து வீரவேங்கைகளுக்கும்
எமது இதய பூர்வமான அஞ்சலியை செலுத்து-
கின்றோம்.

மு. குறிப்பு

எமது இல்லத்தில் இன்று நடைபெறும் எமது மகன் கல்சுத்தின் அந்தியேட்டி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு. -குடும்பத்தினர்

(R/ 1882)

---

## விபத்தில் சிக்கியது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் எப் 16 ரக படைவிமானமொன்று இஸ்லாமாபாத்தில் விழுந்து நொருங்கியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்லாமாபாத்திலிருந்து ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் இடம் பெற்ற இந்த விபத்தில் ஒருவரும் இறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விமான ஓட்டி வெளியே குதித்து தப்பியதால் இந்த மரணம் தவிர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

வந்து ஆறுதல் கூறிவைத்தாய்
எம் இதயத்தின் துயர் நீக்க வெளரி - நீ
லோஜி ஆகி வீறு கொண்டு பாய்ந்த வேளை
மாவீரர் வரிசையிலே, மணலாற்று மண்தனிலே
நீ விதையாக புதைந்து கொண்டாய்

16-09-91 இல் மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது வீரமரணமடைந்தார் இவருடன் மரணமடைந்த ஏனைய வேங்கைகளையும் இந்த நாளில் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம். 30-10-91 இன்றுநடைபெறும் இவ்வைபவத்திற்கு சகபோராளிகளையும், நண்பர்களையும், உற்றார், உறவினரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கேடிலின் நகர்
தெற்பலி (R/1886) -குடும்பத்தினர்

---


# LONDON ACCOUNTANCY CLASSES
## MAY — JUNE — 1992

| | | |
|---|---|---|
| C. I. M. A. | Stage I | 2nd Nov 1991 |
| | Stage II | 30 th Nov 1991 |
| A. A. T. [LONDON] | Prelim | 2 nd Nov 1991 |
| | Inter | 30 th Nov 1991 |
| A. A. T. [SRILANKA] | Level I | 2 nd Nov 1991 |
| | Level II | 30 th Nov 1991 |
| I. A. B. | Foundation | 2 nd Nov 1991 |
| | Inter & Finals | 30 th Nov 1991 |

விபரங்களுக்கு:- **NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14. St. Peters Lane, Jaffna. (B/3400)


---

றோம் (ஜெகநாதன் - சாவகச்சேரி)

1986 ஆம் ஆண்டு மரிகாவற்றுறை - சாரைநகர் கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது வீரமரணமெய்திய

**சுசீலாஜன்** (சித்திரவேலாயுதம் கோபிதரன் - திருக்கோணமலை)

**பிறின்ஸ்லி** (அந்தோனிப்பிள்ளை சகாயதாஸ் - எமில்நகர், மன்னார்)

1987 ஆம் ஆண்டு கோப்பாயில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**நிசார்** (இந்திரலிங்கம் உதயரஞ்சன் - வல்வெட்டித்துறை)

1988 ஆம் ஆண்டு கஞ்சிகுடிச்சாறு பகுதியில் அரவம் தீண்டியதால் எமைப்பிரிந்த

**செல்வா** (வேல்நாயகம் வசந்தராசா - பாண்டிருப்பு)

பரந்தனில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

**2 ஆம் லெப். விமல்** (செல்லத்தம்பி சிவசுப்பிரமணியம் - ஓமந்தை)

உடையான்புரத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

**அறிவழகன்** (குமரபுரம்)

தட்டுவன் கொட்டியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் காயமுற்று விசுவமடுப் பகுதியில் வீரமரணமெய்திய

**கப்டன் கனோஜி அம்மான்** (கிருஷ்ணபிள்ளை சிவராசா - அம்பர்மலை, வல்வெட்டித்துறை)

ஆனைக்கோட்டையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**வாசு** (கி. வாசுதேவன் - வல்வெட்டித்துறை)

அச்சுவேலி - ஆவரங்கால் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரமரணமெய்திய

**மதன்** (கமலநாதன் ரவீந்திரநாதன் - நவகிரி, புத்தூர்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3402)

# ருசியப் பேரரசு எப்படி வளர்ந்தது?

(நேற்றைய தொடர்ச்சி)

## ருசியா (RUSSIA)

வரலாற்று குறிப்புகளின்படி 15 ஆம் நூற்றாண்டின் பின் தான் ருசியாவின் பேரரசு விரிவாக்கப்பட்டதென்று கூறலாம். இரண்டு நூற்றாண்டுகளாக சிலாவிக் மக்களை கொடுமைப்படுத்திய மொங்கோலிய கான் மார்களுடைய (khan) படை அழிவுகளைச் செய்தவண்ணம் சைபீரியா வரை புகுந்த பொழுது கொடிய இவான் என அழைக்கப்படும் இவான் iv- மொங்கோலியன் படைகளுடன் மோதி, மொங்கொலியகான் மாரைச் சரணடையச் செய்தான்.

18ஆம் நூற்றாண்டில் ருசிய பேரரசு வெற்றிகரமாக சுவீடனுடனும், ஒட்டோமன் துருக்கிகளுடனும் சண்டையிட்டு உக்கிரேனிலும் பைலோருசியாவிலும் கூடிய பகுதிகளைக் கைப்பற்றியது 19-ம் நூற்றாண்டில் றொமானோவ் ஜார்ஸ் (Romanovc zars) மன்னர்கள் எஞ்சியிருந்த ஆசிய கான்களுடைய பிரதேசங்களையும் கைப்பற்றி, ரான்ஸ் கோர்க்கேசியாவை (Trans Caucasia) கைப்பற்றச் செய்து, கிறிமியா (Crimea) பிரதேசத்தையும் தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்கள்.

## தட்சிகிஸ்தான் (TADZHIKISTAN)

தட்சிகிய மக்கள் பேர்சிய வம்சாவழியினர் துருக்கிய தொடர்பும் அதன் மூலம் இஸ்லாமிய மதத் தொடர்பும் 10 ஆம் நூற்றாண்டில் இவர்களுக்கு ஏற்பட்டது.

20 ஆம் நூற்றாண்டுவரை ருசியர்களுடைய தலையீடு இருக்கவில்லை. போல்சிவிக் (Bolshevik) புரட்சியின் பின் ருசிய அதிகாரிகள், துருக்கிஸ்தான் சுயாட்சி சோவியத் சோசலிசகுடியரசு என்று (துர்கிஸ்) உருவாக்கினார்கள். இதில் தட்சிக் மக்கள் கூடுதலாக வாழ்ந்து வந்தார்கள். உஸ்பெக்கிஸ்தானின் (Uzbekistan) ஒரு பகுதியாக தட்சிக் சுயாட்சிக்குடியரசு 1924 இல் உருவாக்கப் பட்டது. பின்பு, பிரிக்கப்பட்டு தட்சிகிஸ்தான் குடியரசாக 1929 இல் மாற்றப்பட்டது.

## துர்க்மெனித்தான் (TURKMENISTAN)

சுனி முஸ்லிம் மதத்தைக் கொண்ட துர்க்மானியர் வரலாற்று ஈராக், துருக்கி, சிரியா, ஈரான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருக்கின்றனர். 19 ஆம் நூற்றாண்டில் ருசிய துருப்புகள் மத்திய ஆசிய பிரதேசத்திற்கு வரும்வரை இவர்கள் நாடோடிகளாக வாழ்ந்தார்கள். ஆரம்பத்தில் ருசியர்கள் முன்னேறுவதை இவர்கள் எதிர்த்தாலும், இறுதியில் துர்க்மானியர் 1881 இல் அடக்கப்பட்டனர். 1916 இல் இந்த துர்க்மானியர் புரட்சி செய்தனர். திரும்பவும் அவர்கள் அடக்கப்பட்டனர். 1919 இல் செம்படையினர் ஆக்கிரமித்து ருசிய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்தனர். 1924 இல் துர்க்மானித்தான் ஒரு குடியரசாக மாற்றப்பட்டது.

## உக்கிரேன் (UKRAINE)

கீவ் (Kiev) மையமாகக் கொண்ட ருசியர்களின் அரசியல் பிறப்பிடமான உக்கிரேன் பகுதியில் 16 ஆம் நூற்றாண்டில் டொன்கொசாக்ஸ் (Doncossacks) பகுதியிலிருந்த பொழுது இவர்கள் முதன் முறையாக சுயாட்சி பெற்றிருந்தனர். படைவீரர்களாக திகழ்ந்த இந்த கொசாக்ஸ் மக்கள் போலிஷ்-லித்துவேனியன், ருசியன் பிரபுக்களால் சேவைக்கு சேர்க்கப்பட்டனர். உக்கிரேனியர் போல்சுடன் (Poles) 17 ஆம் நூற்றாண்டில் சண்டை புரிந்த பொழுது ருசியஜார் மன்னரை உதவிக்கு அழைத்தனர். ருசியா இவர்களை தன் ஆட்சியின் கீழ் கொண்டுவருவதற்கு இது ஒரு நல்ல அழைப்பு என்று கருதியது.

1918 இல் தேசாபிமானிகள் உக்கிரேனை ஒரு தனியாட்சி நாடாகப் பிரகடனப்படுத்தினார்கள். ஆனால் விரைவில் செம்படை கீவ் பகுதியைக் கைப்பற்றி உக்கிரேன் முழுவதையும் ஐக்கிய ருசியாவின் கீழ் கொண்டுவந்தனர்.

## உஸ்பெக்கிஸ்ரான் (UZBEKISTAN)

உஸ்பெக் மக்கள், இப்பெயரை கான் உஸ்பெக் தலைவரிடமிருந்து பெற்றனர். கான் உஸ்பெக் என்பவர் மொங்கோலிய- துருக்கிப்படையினரின் புகழ் பெற்ற தலைவர்களில் ஒருவராவார். மத்தியகாலங்களில் சிலாவிக் பிரதேசங்களை கைப்பற்றி ஆட்சிபுரிந்தனர். இந்த உஸ்பெக் மக்கள் 15ம் நூற்றாண்டில் வொல்கா (Volga) நதியின் கீழ்ப்பிரதேசங்களிலும், ஏரல் (Aral) கடலுக்குமிடையில் உள்ள பிரதேசங்களிலும் வாழ்ந்துவந்தனர்.

போல்சேவிக் புரட்சியின் பின் தாஸ்கண்ட் பகுதியிலிருந்து வந்த ருசிய குடியேற்றவாசிகள் துருக்கிஸ்தான் என்ற குடியரசை அமைத்தனர். 1924 -ல் துருக்கிஸ்தானின் வரைபடம் திரும்பவும் மாற்றி வரையப்பட்டது இதிலிருந்து உருவான உஸ்பெக்கிஸ்தான் பின்பு ஒரு குடியரசானது.

| | | மக்கள் தொகை | | ருசியர்கள் |
|---|---|---|---|---|
| எஸ்தோனியா | - | 1500000 | - | 450000 |
| உக்கிரேன் | - | 51700000 | - | 10500000 |
| உஸ்பெக்கிஸ்தான் | - | 20300000 | - | 2200000 |
| கேர்கீசியா | - | 4400000 | - | 946000 |
| கசகிஸ்தான் | - | 16700000 | - | 6300000 |
| லத்வியா | - | 2700000 | - | 820000 |

நன்றி;- சண்டேரைம்ஸ்

---

❋ சிந்தனைக்கு ❋

எல்லோரிடமும் செருக்கு, ஒரே அளவு உள்ளது; ஆனால், அதை வெளிக் காட்டும் வகையிலும் வழியிலும் தான், வேறுபாடு உள்ளது

— லாரோஷ்ஃபுக்கோ

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 30-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2308
த.பெ.எண் 35

# சிறிலங்காவை இந்தியா அவமானப் படுத்தலாம்

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போரிட்டுப் பலியான ஆயிரத்திற்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினரை கௌரவிக்க வேண்டியது சிறிலங்கா அரசாங்கத்தின் கடமையாகுமென இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். என் ஜா சிறிலங்கா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார். மேலும் அவர் இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்கவே இந்திய இராணுவம் புலிகளுடன் போரிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதுவர் ஜா குறிப்பிட்டதுபோல் இந்திய இராணுவம் இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பதே தனது பிரதான நோக்கமாகக் கொண்டு போரிட்டதோ இல்லையோ ஆனால் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு விரோதமாகப் போரிடவில்லை என்பது மட்டும் உண்மை. ஆகையினால் இந்திய இராணுவம் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்காக போரிட்டது என்பதைசிறிலங்கா மறுக்க முடியாதுதான். இதனால் சிறிலங்கா அரசாங்கம் ஒருவகையில் இந்திய இராணுவத்திற்கு நன்றிக்கடன் பட்டது என்பதும் உண்மை தான்.

ஆனால் இதனை இந்தியத் தூதுவர் கேட்டுப் பெறமுற்பட்டுள்ளமை தனியாக மரியாதையை கேட்டுப்பெறும் ஒரு விடயமாக மட்டும் கொள்ள முடியாது இது சிறிலங்கா ஜனாதிபதி மீதான பழிவாங்கு நடவடிக்கையின் ஆரம்பம் ஆகும். சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கும் இந்தியாவிற்கும் இடையில் உள்ள உறவில் ஏற்பட்ட நெருடலின் அறிகுறியாகும்.

இதற்குப் பிரதான காரணம் விடுதலைப் புலிகளுக்கு சிறிலங்கா ஜனாதிபதிஆயுதம் வழங்கியதாகசொல்லப்படும் விவகாரமாகும். இவ் விவகாரம் தொடர்பாக இந்தியஅமைதிப் படை இலங்கையில் இருந்தபோதே இந்திய பத்திரிகைகள் குற்றச்சாட்டுகள் வெளியிட்டிருந்தபோதும் தற்பொழுது சிறிலங்கா ஜனாதிபதி இவ் விவகாரத்தை வெளிப்படையாக இந்தியாவிற்கு எதிரான ஒரு விவகாரமாகப் பயன்படுத்தியமை இந்தியாவைப் பொறுத்து சற்று கவலையும், ஆத்திரமும் அளிக்கும் விடயமாகவே உள்ளது சிறிலங்கா ஜனாதிபதி உலக அரங்கில் தம்மை அவமானப் படுத்தியதாகவே இவ் விவகாரத்தை இந்தியா கருதுகின்றது.

---

## இந்திய இடைத் தேர்தல்கள்

# "கட்சிகளின் செயற்பாட்டை மதிப்பீடு செய்யலாம்"

-வி. பி. சிங்

(லக்னோ)

இந்தியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இடைத்தேர்தல் இப்போதைய அரசியல் அரங்கில் பெரும் மாற்றத்தை தொடக்கி வைக்கும் என ஜனதாதள் தலைவர் வி பி சிங் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக உத்தரப்பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டங்களில் பேசிய போதே இவ்வாறு வி. பி. சிங் தெரிவித்தார்.

மத்தியில் இந்திரா காங்கிரசின் செயற்பாட்டையும், உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் செயற்பாட்டையும் மதிப்பீடு செய்வதாக இந்த இடைத் தேர்தல் அமையும் என்றும் இந்திரா காங்கிரஸ் அரசு விலையேற்றத்தை கட்டுப்படுத்த தவறிவிட்டது என்றும், உத்தரப் பிரதேச அரசு ஒரேயொரு பிரச்சினையில் தான் கவனம் செலுத்தி வருகின்றது என்றும் தெரிவித்தார்.

# அமைச்சரவை அங்கீகாரம் தூதுக்குழுவிற்கு இல்லை

(டெல் அவிவ்)

மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் கலந்து கொள்ளும் இஸ்ரேலிய குழுவை அங்கீகரிக்க இஸ்ரேலிய அமைச்சரவை தவறிவிட்டது அங்கீகாரத்தை அளிக்கு முன்னதாகவே இஸ்ரேலிய அமைச்சரவைக் கூட்டம் கலைந்ததால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை

இஸ்ரேலியப் பிரதமர் சமீருக்கும் வெளியுறவு அமைச்சர் டேவிற் லெவிக்குமிடையே வேறுபாடுகள் தொடர்ந்து கொண்டிருப்பதால் அமைச்...

...விக்கப்படுகிறது.

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் அமைதி பிறப்பது தான் தமது விருப்பம் என்று இஸ்ரேலியப் பிரதமர் சமீர் கூறியிருக்கிறார்.

இதேவேளை சமீர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதனால் மாநாடு தோல்வியடைந்துவிடுமென தான் பிறரைப்போல் கருதவில்லை என்றும் தான் சமீரைச் சந்திப்பது அமைதி பிறக்க உதவுமென்றால் சமீரைச் சந்திக்கவும் தான் தயாராக உள்ள...

...இந்தியாவிற்கு எதிரான ஒரு விவகாரமாகப் பயன்படுத்தியமை இந்தியாவைப் பொறுத்து சற்று கவலையும், ஆத்திரமும் அளிக்கும் விடயமாகவே உள்ளது. சிறிலங்கா ஜனாதிபதி உலக அரங்கில் தம்மை அவமானப் படுத்தியதாகவே இவ் விவகாரத்தை இந்தியா கருதுகின்றது.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தான் இந்திய மேலாதிக்கத்திற்கு எதிரானவர் என்பதை வலியுறுத்த கடந்தகாலம் முழுவதும் முயன்றே வந்துள்ளார். அத்தோடு தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரானவர் என்பதையும் வலியுறுத்தி பௌத்த சிங்கள மக்களின் தன்னிகரில்லாத் தலைவர் என தன்னைக் காட்டிக்கொள்ள முற்பட்டுள்ளார்.

இந்நிலையில் இந்தியாவின் கோரிக்கைக்கு ஏற்ப இந்திய இராணுவத்தைக் கௌரவிப்பதென்பது சிறிலங்கா ஜனாதிபதியினால் நிறைவேற்றப்பட முடியாத அவர் ஏற்படுத்தியுள்ள இமேஜிற்குப் பாதகமான விடயமே ஆகும். அதேவேளை இந்தியாவின் கோரிக்கையை நிராகரிப்பதென்பது சிறிலங்கா ஜனாதிபதி இந்தியாவைக் கௌரவிக்கவில்லை என்ற நிலையினைத்தோற்றுவிக்கும்.

அவ்வாறு நிகழுமானால் தமக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தைப் போக்கிக்கொள்ள இந்தியா சார்க் மகாநாட்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அண்மையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதம் இதனை உணர்த்துமாப்போல் உள்ளது. 'சார்க்' மாநாட்டில் இந்தியா முழுமையாகப் பங்கேற்பது அவசியமெனவும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் 'சார்க்' உச்சிமாநாட்டில் ஆரம்பம் முதல் இறுதிவரையிலும் கலந்துகொள்ள வேண்டும் எனவும் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரகாரம் 'சார்க்' மாநாட்டிற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு பரிபூரணமாக இல்லை என்பதைப் புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது. அத்தோடு இந்தியப் பிரதமர் 'சார்க்' உச்சிமாநாட்டிற்கு கொழும்பு வரினும் மாநாட்டில் முழுமையாகப் பங்கேற்பாரா என்ற சந்தேகத்தையுமே ஏற்படுத்துகின்றது.

மேற் கூறப்பட்டவாறே 'சார்க்' மாநாட்டில் இந்தியா நடந்து கொள்ளுமானால் இட்டவட்டமாக அது 'சார்க்' அமைப்பிற்கு எதிரானது என்பதைவிட சிறிலங்காவிற்கு எதிரானது என்றே கொள்ளுதல் வேண்டும். அதாவது சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை அவமானப்படுத்தும் செயலாகவே இருக்கும்.

...பெற்ற கூட்டங்களில் பேசிய போதே இவ்வாறு வி. பி. சிங் தெரிவித்தார்.

மத்தியில் இந்திரா காங்கிரசின் செயற்பாட்டையும், ...விட்டது என்றும், உத்தரப் பிரதேச அரசு ஒரேயொரு பிரச்சினையில் தான் கவனம் செலுத்தி வருகின்றது என்றும் தெரிவித்தார்.

### சோவியத் குடியரசான

## துருக்மேனிஸ்தானும் சுதந்திரப் பிரகடனம்

(மொஸ்கோ)

சோவியத்யூனியனில் உள்ள மத்திய ஆசியக் குடியரசான துருக்மேனிஸ்தான் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்தக் குடியரசின் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில் சுதந்திரப்பிரகடனத்திற்கான அங்கீகாரம் கிடைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

94 சதவீத வாக்காளர்கள் சுதந்திரத்தை ஆதரித்தனர். இதனை அடுத்து குடியரசின் பாராளுமன்றம் சுதந்திரப்பிரகடனத்தை அறிவித்தது.

கடந்த ஓகஸ்டில் இடம்பெற்ற சதிப்புரட்சி தோல்விக்குப்பின்னர் மொத்தமிருந்த 15 குடியரசுகளில் சுதந்திரப் பிரகடனம் செய்த 13 ஆவது குடியரசு இதுவாகும்.

ரஷ்யாவும், கசகிஸ்தானும் மட்டுமே இதுவரை சுதந்திரப் பிரகடனம் செய்து கொள்ளாத குடியரசுகள் ஆகும்.

### ஆப்கானிஸ்தான்

## அரசியல் தீர்வே சமாதானத்திற்கு வழி

### - சீனப் பிரதமர்

(ராவல்பிண்டி)

ஆப்கானிஸ்தானில் அரசியல் ரீதியாகவே சமாதானம் ஏற்பட முடியும் என்று சீனப் பிரதமர் கூறியுள்ளார்.

பாகிஸ்தானிலுள்ள ராவல்பிண்டியில் பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கானைச் சந்தித்தபோது அவர் மேலும் காபூலில் கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானிலுள்ள சோவியத் ஆதரவு பெற்ற நஜிபுல்லா அரசைக் கவிழ்ப்பதற்காக போராடிவரும் முஜாகிதீன்களுக்கு பாகிஸ்தான் உதவுவதை சீனா நீண்டகாலமாக ஆதரித்து வந்ததமை தெரிந்ததே, தென்னாசியப் பிராந்தியத்தை அணுவாயுத மற்ற சூனியப் பிராந்தியமாக பிரகடனம் செய்யவேண்டும் என்னும் பாகிஸ்தானின் கோரிக்கையைச் சீனா வரவேற்றுள்ளது.

இஸ்ரேலியப் பிரதமர் சமீருக்கும் வெளியுறவு அமைச்சர் டேவிட் லெவிக்குமிடையே வேறுபாடுகள் தொடர்ந்து கொண்டிருப்பதால் அமைச்சரவையால் ஒரு முடிவிற்கு வரமுடியவில்லை எனத் தெரி... ...என்றும் தான் சமீரைச் சந்திப்பது அமைதி பிறக்க உதவுமென்றால் சமீரைச் சந்திக்கவும் தான் தயாராக உள்ளதாகவும் எகிப்து ஜனாதிபதி முபாரக் கூறியிருக்கிறார்.

### அமெரிக்க நிறுவனத்தால்

## மிருகங்களுக்கான பால்மா ஆபிரிக்கருக்கு விநியோகம்

பட்டினியால் வாடும் ஆபிரிக்க மக்களுக்கு மிருகங்களுக்கு வழங்கும் பால்மா உணவை வழங்கியமைக்காக அமெரிக்க கப்பல் நிறுவனமொன்றுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

மிருகங்களுக்கான மலிவான பால்மாவை நாற்றுக்கணக்கான தொன் கணக்கில் அமெரிக்க நிறுவனம் ஒன்று விநியோகித்தமை கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அக்கம்பனி முகாமையாளருக்கு தண்டனை அளிக்கப்பட்டது.

முன்னதாக இக்கம்பனி இலங்கை அரசே இந்த பால்மாவை விநியோகித்தது என்று கூறியது குறிப்பிடத்தக்கதாகும்.

## இஸ்ரேலிய குழுவிற்கு விசேட கவனிப்பு வேண்டும்

(ஜெருசலேம்)

அரபு எதிரிகளுக்கு மத்தியில் இஸ்ரேல் தனித்து நிற்பதனால் இஸ்ரேலிய தூதுக்குழுவிற்கு விசேட கவனிப்பு வேண்டும் என்று மட்றிட்டில் நடைபெறவிருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு செல்லும் இஸ்ரேலிய யூதத் தூதுக்குழுவின் உறுப்பினரான இஸ்ரேலியப்பிரதமர் யிட்சாக் சமீரின் மக்கள் உறவு ஆலோசகரான ஆரென் கூறியுள்ளார். இன்று புதன் கிழமை சமாதான மாநாடு ஆரம்பமாகும்போது பாலஸ்தீனியர்களுக்கும் சமமான நேரம் வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை அரபுகள் கிழக்கு ஜெருசலேம் மீதான உரிமையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யசீர் அரபாத் கூறியுள்ளார். மேலும் மத்தியகிழக்கு சமாதான மாநாடு சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் நடத்தப்படல் வேண்டும் என்று சோவியத் அதிபர் கொர்பசேவ் வலியுறுத்தி உள்ளார்.

# மட்றிட் பேச்சு உடன் தீர்வு தருமென 'எதிர்பார்க்க வேண்டாம்

மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் நிலவும் மிகச் சிக்கலான பிரச்சினைக்கு இப்பேச்சு வார்த்தைகள் உடனடியான தீர்வைத் தரும் என்று எவரும் ஆகக் கூடுதலான நம்பிக்கை வைக்க வேண்டாம் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் கூறியுள்ளார். ஸ்பெயின் தலைநகரான மட்றிட்டில் நடைபெறவிருக்கும் மத்திய கிழக்கு சமாதான மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக புறப்பட முன் வாஷிங்டனில் செய்தியாளரிடம் பேசுகையிலேயே இதனை புஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் எனினும் சம்பந்தப்பட்ட தரப்பினர் கலந்து கொள்ளும் நேரடிப் பேச்சு வார்த்தை ஒரு முக்கிய நடவடிக்கையென வர்ணித்தார்.

இன்று ஆரம்பமாகவிருக்கும் மத்திய கிழக்கு சமாதான மாநாட்டில் இஸ்ரேலுடன் எகிப்து, சிரியா, லெபனான், ஜோர்தான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். ஜோர்தான் தூதுக் குழுவில் பாலஸ்தீனியர்களும் இடம் பெற்றுள்ளனர். இம் மாநாட்டின் தொடக்க நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் சோவியத் அதிபர் கொர்பசேவ் ஆகியோர் மட்றிட் சென்றுள்ளனர்.

## பஸ் மீது துப்பாக்கிச் சூடு நான்கு யூதர்கள் பலி

ஜோர்தான் மேற்குக் கரையின் மத்திய பிரதேசத்தில் நேற்று வலது சாரிகளின் பொதுக் கூட்டமொன்றிற்கு ஆட்களை ஏற்றிச் சென்ற பஸ் வண்டியொன்றின் மீது தன்னியக்கத் துப்பாக்கிகளால் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தாக்குதல் சம்பவத்தில் இரு சிறுவர்கள் உட்பட நான்கு யூதர் கொல்லப்பட்டு உள்ளனர்.

டெல் அவிவ் நகரில் இடம் பெற்ற வலது சாரிப் பொதுக் கூட்டமொன்றுக்குக் குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற மூன்று பஸ்களில் ஒன்றே இத் தாக்குதலுக்கு உட்பட்டது.

மேற்குக் கரைப் பிரதேசம் உட்பட கைப்பற்றப்பட்ட பகுதிகளை இஸ்ரேல் அரபுகளுக்கு விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்தி மேற்படி கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது.

இதேவேளை தென் லெபனானில் ஈரான் ஆதரவு கெரில்லாக்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் இஸ்ரேலியப் படையினர் இருவர் கொல்லப்பட்டதாகவும், இருவர் காயமடைந்ததாகவும் லெபனானிலிருந்து வரும் செய்திகள் கூறியுள்ளன.

## 'நாதஸ்வர கானவாருதி' யின் இசையருவி ஒலி நாடா விரைவில் வெளிவருகிறது

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கி வழங்கவிருக்கும் நாதஸ்வர கானவாருதி வி. கே. பஞ்சமூர்த்தியின் நாதஸ்வர இசை ஒலிப்பதிவு நாடாவான "இசையருவி" யை விரைவில் வெளியிடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஒலிப்பதிவு நாடாவில் பத்து தாயக விடுதலைப் பாடல்களை திரு. வி. கே. பஞ்சமூர்த்தி அவர்கள் நாதஸ்வர இசையாக்கித் தந்துள்ளார்.

நாதஸ்வர இசையுடன் தவில், மிருதங்கம், தபேலா வயலின் உட்பட மேற்கத்தைய இசைக்கருவிகளையும் இணைத்து ஒலிப்பதிவு ஆக்கியுள்ளமை குறிப்பிடக்கூடிய சிறப்பம்சமாகும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் தமிழீழக் கலைஞர்களின் இசைப்படைப்புக்களை தொடர்ந்து வெளியிடுவது என்ற திட்டத்தின் உருவாக்கமே இந்த ஒலிப்பதிவு நாடாவாகும்.


**Short Hand & Typing Classes**
[ஆங்கிலம் & தமிழ்]
I. A. B. FOUNDATION AND INTER
COMPUTER
BASIC LANGUAGE
ஆரம்பம் 06.11.91
விபரங்களுக்கு:-
வடஇலங்கை தொழில் நுட்பக்கல்லூரி கிளை
(North Ceylon Technical Institute)
(Branch)
பிரதான வீதி,
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
(B/3399)


## கலந்துரையாடல்

(நமது நிருபர்)

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த அதிபர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் நாளையும், நாளை மறுதினமும் நடாத்தப்படவுள்ளன. மட்டுவில், கைதடி, சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி வடக்கு கொத்தணிகளில் கடமை புரியும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், உசன், வரணி, கொடிகாமம் கொத்தணிகளில் பணிபுரிபவர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மண்டபத்திற்கும் சமுகம் தரும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

**சூழ்நிலையை**

தாகவும் ஆதர்வெதமுல்ல தெரிவித்தார்.

அத்துடன் கடந்த ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளுக்கான முடிவுகள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்படும் என்றும், நவம்பர் முதற்கிழமையில் செய்முறைப் பரீட்சை முடிவுகள் கிடைத்ததும் பரீட்சை முடிவுகள் 15 ஆம் திகதி வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**2வது லெப்.**

முன்னெடுப்புப் பொறுப்பாளர் கலைலிங்கம் மகளிர் முன்னணியைச் சேர்ந்த தமிழ்ச்சி ஜனார்த்தினன் மத்திய மகாவித்தியாலய அதிபர் இராமலிங்கம் ஆகியோர் உரையாற்றினர். இக்கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். (43)

**தவறு**

தியாகராசா, சாவித்திரியார் வீதி, கருதாவளை, 3ஆம் குறிச்சி என்று தவறுதலாக பிரசுரமாகியுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

**3 இராணுவ**

ருன் ஓடி விட்டனர். இம்மூன்று காவலரண்களும் விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன.

**ஆயுதங்கள் சில மீட்பு**

இக் காவலரண்களிலிருந்து விடுதலைப் புலிகளால் பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

**திருமலையில்**

போது விடுதலைப்புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலின்போது பின்வரும் ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

★ ரி 56-2 ரக துப்பாக்கி - 3
★ ரி 81 ரக துப்பாக்கி - 1
★ 303 ரக துப்பாக்கி -4
★ 303 மகசின் - 4
★ ஏ. கே. மகசின் - 10
★ நடுத்தர ரவைகள் - 420
★ ஜெ. ஆர் கைக்குண்டு - 1
★ 303 ரக ரவைகள் - 20

## மறியல்செய்ய முனைந்த வி. பி. சிங் கைது

(டில்லி)

அயோத்தி நோக்கிச்சென்று கொண்டிருந்த இந்திய முன்னாள் பிரதமர் வி.பி. சிங்கும் தேசிய முன்னணி இடதுசாரிக் கூட்டணியைச் சேர்ந்த தலைவர்களும் அயோத்தி நகருக்குச் சுமார் 65 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ராம்சனேகிகாத்தில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்கள்.

வி.பி சிங்கும் மற்றும் தலைவர்களும் வீதியில் அமர்ந்து மறியல் செய்தபோது பொலிஸார் தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

விஸ்வ ஹிந்து பரிஷத் தொண்டர்கள் சில ஆலயங்களை இடித்துவிட்ட செயலையும், மசூதிக்கு உட்பட்ட இடத்தைச் சுற்றிச் சில நிலப் பகுதிகளைச் சுவீகரிப்பதற்கான உத்தரப்பிரதேச மாநில அரசின் நடவடிக்கைகளையும் எதிர்த்து ஆட்சேபம் தெரிவிப்பதற்காகவே தானும், தொண்டர்களும், ஆதரவாளர்களும் ஹைதராபாத்தில் அமைதியான சத்தியாக்கிரகம் ஒன்றை அனுஷ்டிக்க விரும்பியதாக வி. பி சிங் தெரிவித்தார்.

இதேவேளை அயோத்தியில் உள்ள ஆஞ்சநேயர் ஆலயத்தை இடித்துத் தள்ளிய விஸ்வ ஹிந்து பரிஷத் தொண்டர்களை உத்தரப்பிரதேச அரசாங்கம் கைதுசெய்யவேண்டுமென்று சமாஜவாதி ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கோரியிருக்கிறார்.


அமரர் கிருஷ்ணானந்தன்
**நினைவுப் பணி மன்றம்**
கலந்துரையாடல்
காலம்:: 1-11-91 வெள்ளி பி. பகல் 4-30மணி
இடம்: யூனிவேர்சல்கந்தர்மடம்யாழ்ப்பாணம்
அமரர் கிருஷ்ணானந்தன் நினைவுப் பணிமன்றச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்
(B/3404) செயலாளர்


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

| போர்வீரனாய் | மாவீரனாய் |
|---|---|
| 15 | 16 |
| 11 | 09 |
| 1975 | 1991 |



தமிழீழ மண் மீட்பிற்காக
மணலாற்றில் இன்னுயிர் நீத்த
**வீரவேங்கை லோறன்ஸ்**
முருகேசு தயேந்திரன் (கண்ணன்)

பிரதான வீதி,
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(B/3399)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜெனனம்
மன்னார்
மாதோட்டம்
பாலைக்குளி
மண்ணில்
28-5-1974



வீரமரணம்
ஆனையிறவு
அழிக்க
ஆனையிறவு
மண்ணில்
29-7-1991

## 2ஆவது லெப்டினன்ட் றொனோ
### (ஜெயசிங்கம் மதியழகன்)

மாதோட்டமண்ணில் மலர்ந்த மறத்தமிழனே மதியழகா
பாலைக்குளி மண்ணில் பாலகனாய் நீ தவழ்ந்தாய்
பள்ளிக்கூடம் சென்ற நீ பதினாறு வயதினிலே தமிழர்
படையின் சங்குநாதம் கேட்டு பகைவெட்டிச் சாய்க்கும்
வாளாக, புகைவிட்டுக் கிளம்பும் எரிமலையாக. குகை
விட்டுக்
கிளம்பும் புலியாகப் போர்ப்பரணி தொடுக்கப் புறப்
பட்டவனே
இயக்கத்தில் இணைந்திருந்த ஆண்டு இரண்டில்
களம் பல நீ கண்டாய் பகைவர் பலரை நீ வென்றாய்
சாள்ஸ் அன்ரனியின் படையினிலே அதிரடியாய் நீ
நின்றாய் அன்னியனின் குண்டடியில் நீ சரிந்தாய்.
பதினேழுவயதினிலே, பைந்தமிழ் மண்ணினிலே, விதை
யாகிப்
போனவனே, வெல்லுமடா உன் லட்சியம் காலம் பதில்
சொல்லுமடா நிச்சயம்.

உனக்கும் - இதுவரை உரிமைப் போரிலே உயிர்நீத்த
அத்தனை வீர வேங்கைகளுக்கும் எங்கள்
கண்ணீரை காலடியில் காணிக்கை யாக்குகின்றோம்

தமிழீழம் குடும்பத்தினர்
கைதடி நுணாவில் (R/1889)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

★ 303 மகசின் - 4
★ ஏ கே. மகசின் - 10
★ நடுத்தர ரவைகள் - 420
★ ஜே. ஆர் கைக்குண்டு - 1
★ 303 ரக ரவைகள் - 20

**காங்கேசன்**

நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களை இறக்குவது சிரமம் ஆகையால் காங்கேசன்துறைத் துறைமுகத்தைப் பாவிப்பது தற்போதைய உணவு நெருக்கடியைத் தீர்க்க உதவுமென எதிர் பார்க்கப்படுகிறது-

**இராணுவத்தால்**

யாளரை விசாரணை செய்த ரெலோ உறுப்பினர்கள் ஐந்து நாட்களுக்குள் பத்தாயிரம் ரூபாவைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென அவரை வற்புறுத்தியுள்ளனர்.

**கிழக்கில்**

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் கிழக்கில் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து சிறிலங்கா இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அதேவேளை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கிழக்கிற்கு மேலதிக படைப் பிரிவுகளை அனுப்பி வைத்துள்ளதாக அறிவித்துள்ளது

**இந்தியப்**

தார். இந்தியப் பிரதமரின் கொழும்பு விஜயம் தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்கும் முகமாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் புதுடில்லி சென்று ஆலோசனைகள் நடத்திவிட்டு கொழும்பு திரும்பியிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

**ஆயுதங்கள் சில மீட்பு**

இக் காவலரண்களிலிருந்து விடுதலைப் புலிகளால் பின்வரும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

★ 303-01 ரவை - 50
★ தொலைத் தொடர்பு சாதனம் - 01
★ ஐ எம். ரவை - 450
★ ஏ. கே. மகசின் - 03

**அம்பாறையில்**

கொல்லப்பட்ட படையினரது உடல்களையும் ஆயுதங்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

இத்தாக்குதல் 36 ஆம் கொலனியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினரது முகாமில் இருந்து சுமார் 800 யார் தூரத்தில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு

★ ஏ. கே. ரீஎல் எம் ஜி ரக துப்பாக்கி - 1
★ இயந்திரத் மகசின் - 5
★ ரி56 - 2ரக துப்பாக்கி - 3
★ இயந்திரத் மகசின் - 12
★ ஏ கே. எல். எம். ஜி ரவை - 500
★ நடுத்தர ரவைகள் - 700
★ தொலைநோக்கி - 1
★ ஜே. ஆர் கைக்குண்டு - 1

**படையினரின்**

புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட நான்கு சிறிலங்கா இராணுவத்தினரது சடலங்களும் மக்கள் பார்வைக்காக இம்மாவட்டத்தில் கிராமம் ஒன்றில் வைக்கப்பட்டபோது பெருந்தொகையான மக்கள் சடலங்களைப் பார்வையிட்டனர். (ஈ)

மணலாற்றில் இன்னுயிர் நீத்த

## வீரவேங்கை லோறன்ஸ்

### முருகேசு நயேந்திரன் (கண்ணன்)

மானமுடைய லோறன்ஸ் நீ
வடித்து வைத்த செங்குருதி
கானகமாம் மணலாற்றில்
கரைந்துறைந்து சிந்தியதால்
வானகத்தை சென்றடைந்து
மாவீரனானாயே!-நீ
போன வழி நின்றெமக்கும்
புத்தூக்கம் தாராயோ!!

இன்று இவர் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

புத்தூர் மேற்கு குடும்பத்தினர்
சிந்து செட்டி (R/1890)

# மரண அறிவித்தல்

## திரு. A.C. கனகராஜா

(முன்னாள் தொழிற்பாலர் Walker and Sons Ltd.)

திரு A. C. கனகராசா 28-10-91 இல் கொழும்பில் காலமானார். இவர் Dr. (திருமதி.)ஜோய் கனகராஜா வின் (Mcleod Hospital Inuvil) அன்புக் கணவரும், அருணன், சந்திரன், ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திரு திருமதி S V. சின்னப்பாவின் அன்புப் புதல்வனும் காலஞ் சென்ற Dr. குணசேகரம், திருமதி லில்லி குணசேகரத்தின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற வணபிதா A. C துரைராஜா, A. C. செல்வராஜா, A.C. ஜெயராஜா, A. C. முத்துராஜா, திருமதி சந்திரகுணசிங்கம், மேரி இராஜநாயகம், ரோசி தம்பிஐயா ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அடக்க ஆராதனை கொழும்பு 22 Ratnakera place, Dehiwela இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
Dr. (திருமதி) ஜோய் கனகராஜா
(Mcleod Hospital Innvil)

(R/1891)